1970 ஆகஸ்ட் 28]

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த மாநிலத்தில் கோதுமை உற்பத்தி அதிகரிப்பு சம்பந்தமாக ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா? அல்லது மாநில அரசு சார்பில் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா? ஆமெனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது அரசாங்க சார்பற்ற குழு. அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் வந்து சென்றுர்கள். வேறு தகவல்கள் இல்லை.

மதுரை, ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர் சங்கத்தின் முறையீடு

* 96 வின.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர்கள் வெளியிடங்களிலிருந்து வாங்கி வரும் ஆடுகளுக்கு விற்பனை வரி வசூல் செய்யப்படுகிறதென்று மதுரை நகர் ஆட்டிறைச்சி சில்லரை விற்பனையாளர் மதுரை சங்கம் 20—3—1970 தேதியிட்ட மனுவை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அந்த மனு வருவாய்த் துறை வாரியம், வணிக வரி பிரிவின் முடிவுக்கு அனுப்பப்பட்டது.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். 93-க்கு அப்புறம் 95-ஆவது கேள்வி எடுக்கப்பட்டிருக்கிறது. 94-வது கேள்வி என்னவாயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மை அமைச்சர் என்று தப்பாக போடப்பட்டிருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அதற்கு பதில் சொல்லவேண்டும்.

திரு. டி. மார்டின் : சில்லறையாக இந்தவிதமான ஆடுகள் வாங்கிக் கொண்டு வருகிறவர்களிடம் வரி வசூல் செய்கிறுர்கள் என்ற விண்ணப்பத்தை மார்ச் 1970-ல் அரசுக்கு அனுப்பியும்—அது குறித்த விண்ணப்பத்தை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பியிருக்கிறுர்கள் என்று கூறினர்கள். அந்தவிதமாக வரி வசூல் செய்யாமல் இருக்கும் உத்தரவை மதுரையில் உள்ள வரி வசூல் அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறுர்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபோன்ற உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகளை இறைச்சிக்காக அனுப்புவது என்பதற்கு வரி போடக்கூடாது என்று திட்டவட்டமாக அரசாங்கம் உத்தரவு அனுப்பித்து இருக்

கிறது. வியாபாரத்திற்காக என்று சொன்னால் வரி விதிக்கப்படும். அது சம்பந்தமான உத்தரவு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், சில்லரை இறைச்சிக்கு வரி போடக்கூடாது என்ற கோரிக்கையை மிக்க கவனத்தோடு பரிசீலித்து ரத்து செய்து இருப்பதை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில்லரை வியாபாரிகள் சிலர் சேர்ந்து சந்தைகளில் 40–50 மைல் தூரம் கால்நடையாகக் கொண்டுவர முடியாமல் ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு வருகிறபோது மொத்த வியாபாரத்திற்குக் கொண்டு செல்கிறார்கள் என்று சொல்லி வரி போடப்படுகிறது. இந்த நிலையில் உள்ளவர்களுக்கும் அரசு உத்தரவு மூலம் வரி விலக்குத் தரவேண்டும். சில்லரை வியாபாரிகளுக்கு வரி இல்லாது செய்து இருப்பதற்கு நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மொத்தமாக சந்தைகளிலிருந்து இறைச்சியை சில்லரை வியாபாரிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டால் வரி போடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவரவர்களே, அரசு போட்ட இந்த உத்தரவின் காரணமாக சில்லரை வியாபாரிகளிடமிருந்து வரி வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருப்பிக் கொடுத்து விட்டதாக எனக்குக் கவனம். இல்லை என்றால், கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : இது போன்ற இறைச்சிகள் அடுத்த மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டால் எந்த விகிதத்தில் வரி போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வேறு மாநிலத்திற்கு எடுத்துச் சென்றால் வரி உண்டு. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

ஆயுள் தண்டனைக் காலம்

* 97 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனைக் கால கைதிகளின் கால வரம்பை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, முதிய வயதில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளின் தண்டனை காலத்தைக் குறைக்க அரசு ஏதாவது வகை செய்யுமா?